<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 391 /2017

அரசுதரப்பு 18-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுரேஷ்பாபு | வயது | : | 42 |
| தந்தை/கணவர் பெயர் | : | சுப்ரமணியன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 08.12.2022 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது சிதம்பரத்தில் குடியிருக்கிறேன். திருவக்குளம் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். 06.05.2014 அன்று சுமார் 1.00 மணியளவில் விஏஓவையும், என்னையும் அண்ணாமலை நகர் போலிசார் வரசொன்னதின் பேரில் நாங்கள் அண்ணாமலை நகர் காவல்நிலையம் சென்றோம். அங்கு அருள்பிரசாத்திடம் போலிசார் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார்கள். என்ன வாங்கினார்கள் என்று ஞாபகமில்லை. அருள்பிரசாத்திடமிருந்து ஆதார் கார்டு, ஓட்டு ஐடி, டிரைவிங் லைசென்ஸ் ஆகியவற்றை அவரது பாக்கெட்டிலிருந்து எடுத்தார்கள். போலிசார் விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் அருள்பிரசாத் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து மட்டும் என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் அசாஆ. 16 ஆகும். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் அசாஆ.17 ஆகும். மற்றொரு கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து மட்டும் அசாஆ. 18 ஆகும்.

சாட்சி பிறழ்சாட்சியாக கருத அரசுதரப்பில் அனுமதி கேட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை - போலிசார் விசாரணையில் கடந்த 09.06.2014 ஆம் தேதி இந்த வழக்கில் எதிரியான மோகன்ராம் என்பவரை அம்மன்கோயில் பைபாஸில் உள்ள பெட்ரோல் பங்க் அருகில் காவல் ஆய்வாளர் கைது செய்து விசாரிக்கும்போது சாட்சியாக என்னையும், எனது கிராம நிர்வாக அலுவலரையும் இருக்க சொன்னதின்பேரில் நானும், எனது கிராம நிர்வாக அலுவலரும் போலிசார் தயார் செய்த ஆவணத்தில் கையெழுத்து செய்தோம் என்றும், 06.05.2014 அன்று எதிரி அருள்பிரசாத்தை கைது செய்து ராஜேந்திரன் சிலை அருகே அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், எனது VAO ம் கையெழுத்து செய்தோம், என்றும், பின்னிட்டு 07.05.2014 அன்று வடக்கிருப்பு போஸ்ட் ஆபிஸ் அருகே எதிரிகள் சந்தோஷ், பட்டாபி ஆகியோர் அளித்த ஒப்புத்ல் வாக்குமூலத்தில் நானும் எனது VAO ம் கையெழுத்து செய்தோம் என்றும், 06.05.2014 , 13.05.2014 ல் எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தயார் செய்த கைப்பற்றுதல் மகசரில் நானும் எனது VAO ம் கையெழுத்து செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - அருள்பிரசாத் யார் என்று எனக்கு தெரியாது. கையெழுத்து வாங்கியதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.